விலை: சதம் 75

இலங்கை ஓட்டுப்பலகை கூட்டுத்தாபனம், தங்களது விற்பனை முகவர்களாக எம்மை நியமனம் செய்துள்ளது.
உங்களுக்குத் தேவையான சிப்போட், பிளைவூட் வகைகளுக்கும் கதவுகளுக்கும்
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, டைான்லி ரேட், யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 19 ஷவ்வா 2 இதழ் 170
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 3-8-1981

# சர்வதேச மன்னிப்புச் சபை உறுப்பினர்கள் யாழ். விஜயம்

[யாழ்ப்பாணம்]

சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த சில முக்கிய உறுப்பினர்கள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்தனர்.

யாழ் நகரில் அண்மையில் நடைபெற்ற வன்செயலின்போது பாதிக்கப்பட்ட இடங்களை நேரில்பார்வையிட்ட இவர்கள், பல முக்கிய பிரமுகர்களையும் சந்தித்தனர்.

சர்வதேச மன்னிப்புச்சபையைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்களான பேராசிரியை செல்வி வேர்ஜினு வியறி. பேராசிரியர் அல்பேட் பிளவுஸ்ரின் ஆகிய இருவரும் நேற்று கொழும்பு திரும்பினர்.

இவர்களிருவரும் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள்.

## கையேற்றார்

[மன்னார்]

மன்னார் மறைவாவட்டத்தின் புதிய ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள் தமது பொறுப்புக்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை கையேற்றார்.

### சிறிமா - மைத்திரி: சுதந்திரா பிளவுபட்டது!

# சிறிமாவின் தலைமைக்கு 11,200 கிளை அங்கீகாரம்!

# சதி நடக்கிறது என்று குற்றம்சாட்டுகின்றார்

(நித்தம்புவையிலிருந்து நமது நிருபர்)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நேற்று நடைபெற்ற மிக முக்கிய கூட்டத்தைத் தொடர்ந்து, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமைப்பீடத்துக்கே கட்சியினர் முழு அங்கிகாரம் அளித்துள்ளதுடன், கட்சியின் சகல அதிகாரங்களும் இவருக்கே வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய தலைவர்களுக்கிடையே அண்மைக்காலமாக ஏற்பட்ட பிளவு நிரந்தரமாகிவிட்டதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய கூட்டமொன்று நித்தம்புவையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

## 15,000 பேர் வந்திருந்தனர்

நித்தம்புவையிலுள்ள பழைய சங்கபோதி வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இலங்கை பூராவிலுமுள்ள பதினோராயிரத்து இருநூறுகிளைகளைச் சேர்ந்த பதினையாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். கட்சியின் சகல மாவட்டச் செயலாளர்களும் சமுகமளித்திருந்தனர்.

## இவர்கள் வரவில்லை

இந்தக் கூட்டத்துக்குத்தாங்கள் அழைக்கப்படவில்லை என்று கட்சியின் பிரதித் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா, திரு. அனுரா பண்டாரநாயக்கா மற்றும் பதினொரு பேர் அறிவித்திருந்த போதிலும், இவர்கள் அனைவருக்கும் தாம் அழைப்புகள் அனுப்பிவிட்டதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விடுத்த பத்திரிகைச்செய்தியில் தெரிவித்திருந்தார்.

நேற்று நடைபெற்ற இக்கூட்டத்துக்கு திரு. மைத்திரிபால சேனநாயக்கா, திரு. அனுரா பண்டாரநாயக்கா உட்பட ஜனாப் ஹலீம் இசாக், திருவாளர்கள் பி.பி.ஜீ. கலுகல்ல, ஜே. ஆர். பீ. சூரியபெருமா. டிக்ஸன் சில்வா. ஆர். பி. விஜேசிறி, ஸ்ரான்லி திலகரத்ன, மங்கள முனசிங்க, சுமதிபால ஜெயவர்த்தன, பசில் ராஜபக்ஷ ஜனாப் அலவி மௌலானா, திருமதி பாலசூரியா ஆகியோர் சமுகமளிக்கவில்லை.

## சதி நடக்கிறது

கூட்டத்தை ஆரம்பித்து வைத்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமதுஉரையில் தமக்கு எதிராகப் பெரும் சதி நடக்கிறது என்றும், இதன் பின்னணியில் யார் நிற்கின்றார்கள் என்பது தமக்குத் தெரியும் என்றும் கூறினார்.

ஒருகட்டத்தில் அவர், தமது கூற்றை ஊர்ஜிதப்படுதத ஒலிப்பதிவுநாடாவையும் பயன்படுத்தினார்.

## ஒலிப்பதிவுநாடா

''நான் இங்கு கூறுவது பொய் என்றால், இந்த ஒலிப்பதிவுநாடாவில் என்ன இருக்கிறது என்பதை நீங்களே நேரில் கேட்கலாம்'' என்று கூறிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அதனை இயக்குமாறு உதவியாளருக்குப் பணித்தார்.

ஒரு அரசியல்வாதியின் மனைவிக்கும் புகழ்பெற்ற ஒரு பத்திரிகையாளருக்குமிடையே நடைபெற்ற தொலைபேசி சம்பாஷணையை அந்த ஒலிப்பதிவுநாடா அம்பலப்படுத்தியது!

இந்த நாடாவில் ஒலிப்பதிவான சம்பாஷனை முடிவுற்றதும், ''இனிமேல் உங்கள் முடிவை நீங்கள் அறிவிக்கலாம்'' என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

அப்பொழுது. ''நீங்களே தலைவி, உங்களுக்கே சகல அதிகாரங்களும்; நீங்கள் நினைத்தமாதிரி கட்சியைப் புனரமைக்கலாம் என்று அவையினர் ஒருமனதாகக் குரல் எழுப்பினார்கள்.

## நிறைவேறிய தீர்மானங்கள்

நேற்றைய கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

° திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காதான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி.

° கட்சியின் சகல அதிகாரங்களும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு வழங்கப்படவேண்டும்.

° கட்சிக்கள் களையெடுப்பு உள்ளிட்டு கிளைகளைப் புனரமைப்பது சம்பந்தமான அதிகாரங்களும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு வழங்கப்பட்டுள்ளது

[6-ம் பக்கம் பார்க்கவும்]

### பானிசதாருக்கு உடந்தை:

# ஏழு பேர் கைது

தெஹ்ரான் ஆக. 2

முன்னாள் ஜனாதிபதி பானிசதார் ஈரானிலிருந்து தப்பி ஓடுவதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின்மீது ஏழுபேரை ஈரானிய உயர்அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

ஆனாலும் இந்த ஏழுபேர் தொடர்பான தகவல்களைத் தெரிவிக்க ஈரானிய அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

நிலைமை இவ்வாறிருக்க கடந்த வெள்ளிக்கிழமை, உளவறிந்த குற்றச்சாட்டின்பேரில் ஈரானில் 19 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஈரானின் புதிய ஜனாதிபதியாகப் பிரதமமந்திரி ஜனாப் அலிரஜாய் அடுத்தவாரம் பதவியேற்கவுள்ளதால், ஈரானின் புதிய பிரதமமந்திரியையும் மற்றும் அமைச்சர்களையும் தெரிவு செய்வதற்காக அந்நாட்டின் அரசாங்கம் ராஜினுமா செய்துள்ளது.

### இலங்கையில் விரைவில்

# சர்வதேச இந்து கலாசார நிலையம்

## அமைச்சர் 'இராசு' தகவல்

[கொழும்பு]

''அகில உலக இந்துமகாநாடு நடத்துவற்கு குறைந்த பட்சம் 20 லட்சம் ருபா நிதி தேவைப்படுகின்றது. மகாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு இந்து ஆலயங்கள், மதஸ்தாபனங்கள், பொதுமக்கள் நிதி உதவி செய்ய வேண்டும்.''

இவ்வாறு பிரதேச அபிவிருத்தி. தமிழ்மொழி அமுலாக்கல், இந்துசமய இந்து கலாச்சார அமைச்சர் திரு. செ. இராசதுரை நேற்று கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற அகில உலக இந்துமகாநாடு 1982ன் ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். மேலும் அமைச்சர் திரு. செ. இராசதுரை உரையாற்றுகையில் கூறியதாவது:

''சமயத்தை அரசாங்கத்துடன் இணைந்து இயந்திரமயமான ரீதியில் வளர்க்கக் கூடாது என்பது என்னுடைய நோக்கம். மகாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். அகில உலக இந்துசமய சாதுக்கள், துறவிகள், சமயப்பெரியார்கள், யோகிகள், குருமகாசன்னிதானங்கள், அறிஞர்கள், கவிஞர்கள் யாவரும் இந்த மகாநாட்டில் கூடவிருக்கிறார்கள். இந்து சமய ஏற்றத்தைப் போற்றவும். எழுச்சியை ஊட்டவும், ஆன்மீக வளர்ச்சியை அகிலஉலகெங்கும் பரப்பவும் இந்த மகாநாடு உதவும். இந்த மகாநாட்டின் போது சர்வதேச இந்துகலாசார நிலையமொன்று இலங்கையில் நிறுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இலங்கையில் இந்துசமயம் ஆற்றிய பணியை வெளிப்படுத்தக்கூடிய சிறப்புஅம்சங்கள் பொருந்திய நூல்கள், பொருட்கள் ஆகியவை இருந்தால் பொதுமக்கள் எனது

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மல்லாகம் நீதிமன்றத்திற்கு கிழக்குப் பக்கமாக 300 யார் தூரத்தில் பனைகளுடன் நிரந்தரமானவுள்ள 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. நடராசா, மல்லாகம் சட்டத்தரணியுடன் தொடர்பு கொள்ளவும். 0497

கொக்குவில் பிரம்படியில் (நாமு பல்கலைக் கழகத்திற்குச் சமீபம்) 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: க. துரைராசா, தந்தை இல்லம், மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. 0501

உழுந்து உடைக்கும், மாவு அரைக்கும் கல்லு இறைண்டு 24" உடனடி விற்பனைக்குண்டு. குமரன் மில்ஸ்; 241, நாவலர் றோட், யாழ்ப்பாணம் 0486

புனரமைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்துள்ளோம். நா. சரம்பலிங்கம் அன் கோ, யாழ்ப்பாணம். 0479

அடைவு கடைக்கு உரிய ஏபி கடும், கவுண்டரும் உண்டு. கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். செ. சண்முகராசா அன் பிறதர்ஸ், 151, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0495

## தேவை

என்வலப் தயாரிப்பதில் அனுபவம்வாய்ந்தவர்கள் தேவை. இருபாலாரும் 15-8-81 திகமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0499, 'ஈழநாடு', யாழ்ப்பாணம் 0499

தப்பரான வேப்பம் விதைகள் தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளப்படும். மில்க்வைற், யாழ்ப்பாணம். 0485

கொம்பனிட்டர், ஓடர் எடுக்கக்கூடிய மனேஜர் தேவை நேரில் வரவும். சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 0494

### தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் [வரையறுக்கப்பட்டது]

### அறிவித்தல்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் பாவனைக்குப் பயன்படுத்த முடியாத பழுதடைந்த சீனி, மாவு, திட்டல் பச்சை, நாட்டரிசி, உழுந்தம் பருப்பு ஆகிய பொருட்கள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. ரூ 50/- வைப்புப் பணமாகத் தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரம் 7-8-81ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4-00 மணிக்கு முன்னர் இடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் "கழிவுப் பொருட்கள் கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் சங்க வேலைநாட்களில் காலை 8-30 தொடக்கம் மாலை 5-30 மணி வரை காரியாலயத்தில் பார்வையிடலாம். 7-8-81ம் திகதி பி. ப. 4-00 மணிக்கு உபசபையினர் முன்னிலையில் கேள்விப் பத்திரம் திறக்கப்படும்.

பொதுமுகாமையாளர்.

81-07-31. 0491

### கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி

கணக்காளர் தரம் II பதவிக்கான

### வெற்றிடம்

எமது சங்கத்தில் கணக்காளர் தரம். II பதவிக்கு பின்வரும் தகைமைகள் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வேதனம்: 400 — 650 / 15 X 10, 20 X 5

விண்ணப்பிக்க விரும்புவோர் 10-8-81க்கு முன் பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி. என்னும் முகவரிக்கு இடது மேல் மூலையில் கணக்காளர் தரம் II-க்கான விண்ணப்பம் எனக் குறித்து அனுப்பி வைக்க வேண்டும்.

தகைமைகள்

வயது: 25 — 50

1. ஒரு வருடகால அனுபவத்துடன் கணக்கியலில் ஒரு பட்டமாகக் கொண்ட பட்டதாரி அல்லது

2. ஒரு வருடகால அனுபவத்துடன் கொழும்பு சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்கியலில் பெற்ற டிப்புளோமா, அல்லது

3. கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப் பத்திரத்துடன், அத்தகைய ஓர் நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு வருடகால அனுபவமும்,

4. 7 வருடகால அனுபவம் பொருந்திய ஒன்றிணைந்த கூட்டுறவுப் பரிசோதகர்.

பொது முகாமையாளர்

27-7-81 0490

# மட்டக்களப்பு மாவட்டம்:

# உயர்பொலிஸ் அதிகாரிகள் அனைவருமே தமிழ் தெரியாதவர்களாம்

(மண்டூரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர் பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் தமிழரல்லாதவர்களாகவே உள்ளனர்.

பிரதிப் பொலிஸ்மாஅதிபர், பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட பெரும்பாலான பொலிஸ் உத்தியோகத்தர்களும் தமிழ் தெரியாதவர்களாகவே உள்ளனர்.

பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே அண்மைக் காலத்தில் இங்கு பிரச்சினைகள் ஏற்படுவதற்கும் இதுவே காரணமென்று கூறப்படுகிறது.

தமிழ் எம். பி க்கள் உட்பட பல பொது ஸ்தாபனங்களும் இதுபற்றி மேலிடத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்த போதிலும் இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் இனவாதம் சாதிப்பது கவலைக்குரியது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## கேள்வி விண்ணப்பம்

### கரைச்சி தெற்கு ப.நோ. கூ. சங்கம் கிளிநொச்சி

### கழிவு மாவு விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தில் மொத்த விற்பனை நிலையத்திலுள்ள கழிவு மாவு (Sweeping Flour விற்பனை செய்வதற்கான விண்ணப்பம் எம்மால் கோரப்படுகின்றன. இதைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் 05-08-1981க்கு முன் மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 50/- (ஐம்பது)வை எமது சங்கத்தில் செலுத்தி ரசீது பெறப்படவேண்டும்.

விண்ணப்பத்தில் பணம் செலுத்திய ரசீதின் இலக்கம் குறிப்பிடப்படுவதுடன் 10-8-1981 திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் "பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி" என்னும் விலாசத்திற்கு "கழிவு மாவு கொள்வனவுசெய்வதற்கான கேள்வி" எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்து முத்திரையிட்டு அனுப்பவேண்டும்.

தெரிவுசெய்யப்பட்டவர் அறிவித்தல் கிடைத்து மூன்று நாட்களுக்குள் முழுத் தொகையையும் செலுத்தி அவற்றை எடுத்துச் செல்லவேண்டும்.

பொது முகாமையாளர்

31-7-1981. 0496

## 'விடுதலைக்காக எக்கட்சியுடனும் இணைந்து போராடத் தயார்'

(கொண்டாவில்)

"மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்ற எந்த ஒரு இடதுசாரிக் கட்சியுடனோ அல்லது கட்சியுடனோ சேர்ந்து போராடத் தமிழர் சுயாட்சிக் கழகம் பின்னிற்கமாட்டாது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் 1956ம் ஆண்டு முதலே அவர்களது உரிமை விஷயத்தில் ஒரே நிலையில் இருந்துள்ளார்கள். அரசியல் ரீதியாக ஆட்சிகள் மாறியுள்ளன. இதில் தமிழ்மக்கள் உரிமைக் கண்ணோட்டத்துடனும், சிங்கள மக்கள் பொருளாதாரக் கண்ணோட்டத்துடனுமே அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்."

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகப் பிரமுகர் சட்டத்தரணி எம். ஸ்ரீகாந்தா குறிப்பிட்டார்.

"வாக்குரிமை பெற்ற 50 ஆண்டுகளும் அதன் பலாபலனும்" என்னும் விடயம் பற்றி 5 கட்சிகளின் பொதுமேடைக் கருத்தரங்கு உயரப்புலம் ஆனைக்கோட்டை சனசமூக நிலையத் தலைவர் திரு. இ. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழர் சுயாட்சிக் கழகம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இடது கம்யூனிஸ்க்கட்சி ஆகியன பங்குகொண்டன.

ஸ்ரீகாந்தா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது?

1947ம் ஆண்டு ஒரு இனத்தின் வாக்குரிமை தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதிகளின் ஆதரவுடன் முற்றுமுழுதாகப் பறிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்குப் பொறுத்தமட்டில் அரசு இனவாத அடிப்படையிலேயே தொழிற்படுகின்றன. இன்று மிகவும் பயங்கரமான இடத்தை நோக்கிச் செல்கிறது. 1988ம் ஆண்டுத் பாராளுமன்றத் தேர்தலும் 1984ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறவுள்ளது. மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலிலேயே வாக்குரிமை ஒரு கேள்விக்குரிய விடயமாக்குகையில் அத்தேர்தலில் எவ்வளவு மோசடிகள் நடைபெறமுடியும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

"மனித உரிமைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புப்படையால் கைதுசெய்யப்படுபவர்கள் 24 மணித்தியாலத்தில் நீதிமன்றத்தின்முன் கொண்டுவரப்படவேண்டும். ஆனால் விசேட சட்டத்தின்கீழ் அரசியல் பக்கம் தலைகாட்டாதவர்கள் கூட தமிழராகப் பிறந்தோரே குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு என்ன செய்யப்படுகிறார்கள் என்றே தெரியாதநிலையில் கொண்டு செல்லப்படுகின்றார்கள்.

இடது கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. செந்திவேல், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பில் திரு. குமாரவேலு (ஆசிரியர்), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பேராசிரியர் சாதசாஜப்பெருமாள் ஆகியோர் உரையாற்றினர். தலைவர் தமது உரையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இக்கருத்தரங்கில் பங்குபற்றாதது வரவேற்கக்கூடிய ஒன்றல்ல என்று குறிப்பிட்டார். (நி)

அ. சொக்கலிங்கம்
சட்டத்தரணி.
14', பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல: 34 ஆ-பிரிவுகள் 524,532

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் காலஞ் சென்ற சுதுமலையைச் சேர்ந்த தம்பையா பிள்ளை வேலுப்பிள்ளை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர் வேலுப்பிள்ளை தம்பையாபிள்ளை, சுதுமலை, மானிப்பாய்.

மனுதாரர்.

(ரணசாதனம்)

இல: 3607

(சொமாதிக்கம்)

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 4 ஆந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முடிவானதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

பதிவாளர்.

1981-ஆம் ஆண்டு ஆடி மாதம் 3 ஆம் நாளைய இன்று தேதியிடப்பட்டது.

0477

## காணிகள் விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள், துரிதமாய் அபிவிருத்தி அடைந்து வரும் பகுதியில், வீடமைப்புத் திட்டங்களுக்கு அண்மையில், ஒட்டுமடம் அராலி வீதியில், ஒவ்வொன்றும் சுமார் இரண்டு நெற் பரப்புடைய 12 துண்டுக் காணிகள் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: த. சோமசுந்தரம், 65, அரசடி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7020

0498

## கூடிய சம்பளத்துடன் உடனடி வேலை வாய்ப்பு

எமது சங்கமூலம் சாவகச்சேரி மொத்தத் தொழிற்சாலைக்கு வேலைக்கு அனுபவம் பின்வரும் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். விருப்பமுடையவர்கள் 07-08-81 திகு முன்னர் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். அனுபவத்திற்கேற்றவாறு சம்பளம் வழங்கப்படும்.

1. தொழிலாளர்கள்
2. தச்சுவேலையாளர்கள்
3. மேசன்
4. ஓட்டுநர்கள்

க. ஸ்ரீபாஸ்கரன்
தலைவர்
மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்
0502


# ரீப்போல்
இப்பொழுது கைக்கடக்கமாய் உள்ளது
உபயோகத்திற்கு — இலேசாக அழுத்தி எடுக்கக்கூடிய ஒரு புதிய பக்கெட்டில் கிடைக்கிறது




மற்றுமொரு தரமான லங்கெம் தயாரிப்பு

500 மி. லீ. விலை ரூ 11/-

**மணிவாக்கு**

நான் தேவசந்நிதானத்திலிருக்கிறேன் என்று கூடிய வாய் நினைக்கிறேன். அதுவே தூய்மையாய் இருக்கிறதற்கு நல்லவழி.

— யோக சுவாமிகள்

# நமது நோக்கு

## தமிழ்மக்களின் தனிப்பெருமை

எங்கள் முந்த நாள் பத்திரிகையின் முதற் பக்கத்தில் காணும் படத்தை வாசகர்கள் நுணுக்கமாகக் கவனித்திருப்பார்கள்.

அண்மையில் லண்டனில் நடைபெற்ற இலங்கைக் கண்காட்சியை பிரிட்டிஷ் ராணி எலிசபெத் திறந்து வைத்து நடராஜர் சிலையை இரசித்துக் கொண்டிருக்கிறார். அவர் பக்கத்தில் நின்று அச்சிலையின் மகிமையை விளக்குமாப்போல் தம் கையைப் பணிவாக அசைக்கிறார் பிரதமர் பிரேமதாசா.

இதே படத்தை கொழும்பில் வெளியாகும் ஆங்கிலத் தினசரி ஒன்று - ஏரிக்கரை - அந்த முன்தினம் பிரசுரித்திருந்தது. குறிப்பிடத்தக்கது. 'வெங்கலச் சிலை ஒன்றை மகாராணி பார்வையிடுகிறார்' என்பதே அடிக்குறிப்பாயிருந்தது.

நடராஜ வடிவத்தை ஒரு வெங்கலச் சிலையாக மதிக்கும் மனப்பான்மை நாம் என்னவென்று எடுத்துரைப்போம்!

கலைஅழகிலும் சமயக் கருத்திலும் சிறப்புடையது நடராஜ வடிவம். கடவுளை நடராஜ மூர்த்தியாக வழிபடும் தனிப்பெருமை தமிழ் மக்களுக்கே உரியதாகும். சிவனை இலிங்க உருவத்தில் வழிபடும் முறையானது இந்தியா முழுவதிலும் காணப்பட்டாலும் அவன் தன்னைக் கூத்தப்பிரானாக வணங்கும் வழக்கு பெரும்பான்மையாகத் தமிழ்நாட்டில் மாத்திரமே காணப்படுகிறது. எங்கள் நாட்டின் சிவன்கோவில்களிலே காணப்படும் நடராஜ மூர்த்தமும் இதுவே.

அழகிய திருக்கூத்தாடி ஆன்மாக்களை ஈடேற்றும் குறிப்புடைய நடராஜ வடிவத்தை நமக்குத் தந்தது சைவசித்தாந்தம் 'தமிழ் மக்களின் பேரறிவின் பெருவிளைவே சைவசித்தாந்தம்' என்று குறிப்பிடுகிறார் மேனாட்டு அறிஞர் டாக்டர் போப் அவர்கள்.

'அழகிய பொருள் ஒன்று என்றென்றும் மகிழ்ச்சி பயப்பதாகும்' என்று ஆங்கிலப் புலவர் கீட்ஸ் பாடியிருக்கிறார். பார்க்குந்தோறும் இன்பத்தையளிக்கும் பசுமைத்தாகிய இருவுருவம் தமிழ்மக்களுக்கு நடராஜ வடிவமேயாகும்.

ஐந்தொழிலும் விளங்க ஆண்டவன் கூத்தாடும் தில்லைச்சிற்றம்பலமே சைவ உலகத்தில் 'கோயில்' என்று சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இக்தத்துவத்தை உலகுக்கு எடுத்து விளக்கியவர் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள். அவருடைய கருத்துக்களில் சிறப்பானதொன்றைக் குறிப்பிடுதல் அவசியம்:

"ஒரு கூட்டத்தார்க்கோ அது, ஒரு நூற்றாண்டைச் சார்ந்த இத்தன்மையாளர்க்கோ வது உரியதன்றி, எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் உள்ள ஞானிகளாலும், பக்தர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படுவது. கலைஞான இருடிகளின் ஆழ்ந்த சித்தருசக்தியும் கருணையூற்றுப்பெருக்கும் உருவானதே இந்த நடனசொரூபம்."

கலாயோகி ஆனந்தக் குமாரசாமியின் 'சிவநடனம்' என்ற ஆங்கிலநூல் உலக இலக்கியத்தில் என்றும் நிலைத்திருக்கும் அரிய சொத்து. இவருடைய தந்தை சேர் முத்துக்குமாரசுவாமி ஆசியாவின் முதலாவது பாரிஸ்டர். விக்ரோறியா ராணியின் அரண்மனையில் நெருங்கிய அறிமுகம்பெற்ற பேரறிஞர். சேர் இராமநாதனின் தாய்மாமன். பிரிட்டிஷ் பிரதமர்கள் கிளாட்ஸ்டன், டிஸ்றெயிலி போன்றவர்களின் நெருங்கிய நண்பன்.

இத்தகைய பரம்பரையில் உதித்த ஞானமே நடராஜ வடிவத்தை மேலும் விளக்கியது. பிரிட்டிஷ் பொருட்காட்சிச்சாலையில் சிறந்த நடராஜ வடிவங்கள் உண்டு. உலக ஆராய்ச்சியாளரின் கவனத்தை ஈர்க்கும் உன்னத உருவங்கள் இவை.

லண்டனில் நடைபெற்ற கண்காட்சியில் தமிழ்ப்பண்பாடு, கலாசாரம் எந்தளவு இடம்பெற்றிருந்ததென்று சந்தேகிக்க எமக்கு குறிப்பிட்ட படம் பெரும் மகிழ்ச்சியளிக்கின்றது.

'இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்ற அப்பர் அடிகளின் கூற்றை விளங்காது இருட்டடிக்கும் பத்திரிகைபற்றி நாம் கவலைப்படவில்லை. பிரதமர் பிரேமதாசவும், மகாராணியும் இதன்பின்னணியை நன்கு அறிந்திருப்பார்கள்! ஆனால் வாசகர்கள் பாவம்!

# அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை விவாதத்துக்கு வருகிறது

அரசாங்கத்துக்கெதிரான எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் நாளை விவாதத்துக்கு எடுக்கப்படவிருக்கிறது.

மூன்று தினங்களுக்கு நடைபெறவிருக்கும் இவ்விவாதத்தில், பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள 'முழு விடயங்கள்' தொடர்பாக 'சுதந்திரமான' விவாதம் இடம்பெறுமா?

### யாழ்ப்பாண தேர்தல்

எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் யாழ்ப்பாண அபிவிருத்திச்சபைத் தேர்தல் நடைமுறைகள் முக்கியமான ஓர் அம்சமாக இருக்கிறது. ஆனால் அத்தேர்தல் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தேர்தல் ஆட்சேபனை மனுவொன்று தாக்கல்செய்யப்பட்டு விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது இதுவே சுதந்திரமான விவாதம் அனுமதிக்கப்படுமா?' என்ற வினாவை எழுப்பும் காரணியாகிறது.

சபை நிரந்தர விதிகளின் 84 (vi)ம் பிரிவின்கீழ் நீதிமன்றமொன்றின் முன்னுள்ள விடயம் பற்றி உறுப்பினர் ஒருவர் குறிப்பிடுவது முடியாததாகும்.

"சட்ட நீதிமன்றமொன்றின் தீர்ப்புக்குட்பட்டுள்ள அல்லது சட்டமுடிவை எதிர்நோக்கியுள்ள எவ்விடயம் பற்றியும் ஓர் உறுப்பினர் குறிப்பிடலாகாது" என்பது அந்தப் பிரிவு.

ஏற்கனவே மூன்று தடவைகள் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இந்தப் பிரிவின்கீழ் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஒழுங்குப் பிரச்சினை கிளப்பியிருக்கிறார் ஆனால், மூன்று தடவைகளிலும் அவரது ஒழுங்கு பிரச்சினையை சபையில் எழுப்பக்கூடியவர்கள் அரசாங்க உறுப்பினர்களே. அப்படி அவர்கள் பிரச்சினை எழுப்பும்பட்சத்தில் அரசாங்கத்தின் முன்னைய வாதங்களையும் சபாநாயகரின் தீர்ப்புகளையும் எதிர்க்கட்சியினர் தமக்கு ஆதாரமாக்கக்கூடும்!

குடியியல் தகுதியீனங்களை விதிக்கும் உள்ளூர் அதிகார சபைகள் சட்டமூலம் மீதும், விசாரணை ஆணைக்குழு திருத்தச்சட்டமூலம்மீதும் பின்னர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரின் குடியியல் உரிமைகளையும் திருமதி சிறிமாவோவின் பாராளுமன்ற உறுப்புரிமையையும் நீக்கும் தீர்மானங்கள் மீதும் திரு. அமிர்தலிங்கம் முன்னர் இவ்வொழுங்குப்பிரச்சினைகளை எழுப்பினார்.

முதல் விடயத்தில் இவர் பிரச்சினை எழுப்பியபோது சபாநாயகராகவிருந்தவர் இராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ். அப்போது பழைய அரசியல் அமைப்பின்கீழ் சபை தேசிய அரசுப் பேரவையாக இருந்தது. எதிர்க்கட்சித்தலைவரின்

— மாலி —

ஒழுங்குப் பிரச்சினை 'சட்டமூலம்' ஒன்றின் விடயத்தில் வலுவற்றது என்று 'எஸ்கின் மே' (Erskine May) இன் "பாராளுமன்ற நடைமுறையை" ஆதாரம் காட்டி திரு அல்விஸ் அவ்வொழுங்குப் பிரச்சினையை நிராகரித்தார். இத்தகைய ஆதாரம் காட்டி விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு திருத்தச் சட்டமூலம் மீது பின்னர் எழுப்பப்பட்ட பிரச்சினையில் சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் நிராகரித்துத் தீர்ப்பளித்தார்.

இவற்றின் பின்னர் 1980 அக்டோபர் 16-ந் திகதி திருமதி சிறிமாவோ, திரு. பீலிக்ஸ் ஆகியோர் தொடர்பான தீர்மானங்களின் போது எழுப்பப்பட்ட பிரச்சினையில் நீண்ட விவாதம் சபையில் இடம்பெற்றது. 'எஸ்கின் மே'யையும், பிரித்தானிய

[5ம் பக்கம் பார்க்க]

# பிரிட்டிஷ் பொலிசாரின் 'பண்பு'

பிரிட்டிஷ் பொலிஸார் உலகத்திலேயே மிகப்பண்பு வாய்ந்த காவற்படையினர் என்ற நற்பெயரை ஒரு காலத்தில் பெற்றிருந்தனர், ஆனால் அதுவெல்லாம் இப்பொழுது மலையேறிவிட்டது.

அண்மையில் பிரிக்ஸ்டனில் நடைபெற்ற கலவரங்களின் போது பிரிட்டிஷ் பொலிசார் நடந்துகொண்ட மிலேச்சத்தனமான முறைபற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள் விரிவாக வர்ணித்துள்ளன.

தட்சர் அம்மையாரின் இனவாதக் கொள்கைகளின் விளைவாக உருவாகியுள்ள இனவாத நோய் பிரிட்டிஷ் பொலிசாரையும் பிடித்துள்ளது.

சில காலமாக கறுப்பு இனத்தவரையும் வெள்ளையரல்லாதவரையும் பல்வேறு வழிகளில் பிரிட்டிஷ் பொலிசார் துன்புறுத்தி தொல்லை கொடுத்துவருவதாக இப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

எத்தனை காலம் பொறுத்திருப்பது? தாங்கொணாத இவ்வடக்குமுறையை எதிர்த்துத் தான் கறுப்பு இன இளைஞர்கள் கிளர்ந்தெழுந்தனர். இதற்கு உடனடிக் காரணமும் இருந்தது.

திட்டமிட்டு ஆயிரக்கணக்கான பொலிஸார் பிரிக்ஸ்டனில் குவிக்கப்பட்டனர். இவர்கள் கறுப்பு இளைஞர்களைக் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் காரணமின்றித் தாக்கினார்களாம்!

சிவில் உடை அணிந்திருந்த சில பொலிஸ்காரர் சட்டப்படி அனுமதிக்கப்படாத சில ஆயுதங்களை-சிக்கின் செயின், இரும்புக்கம்பி போன்றவை வைத்திருந்ததாக நேரில் கண்டவர்கள் கூறியிருக்கிறனர்.

காவற்படையினரின் அட்டூழியங்களை மேலும் தாங்க முடியாத நிலையில்தான் கறுப்பு இளைஞர் தமது 'கைவரிசை'யைக் காட்டத்தொடங்கினர். ஒரு கட்டத்தில் பொலிஸார் ஓட்டம்பிடிக்கவேண்டியிருந்தது. பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்ட கறுப்பு இளைஞர்கள் அவர்களை ஒரு 'கைக்கு' கலக்கினர். இந்த இளைஞர்களிடம் இருந்த 'ஆயுதங்கள்' என்ன தெரியுமா? கற்கள், போத்தல்கள், பெட்ரல் குண்டுகள்.

இவை இனக்கலவரங்கள் என்று வர்ணிக்க சில பத்திரிகைகள் முற்பட்டுள்ளன. இது உண்மைக்கு முரணானது. எந்தவொரு வெள்ளையனையும் கறுப்பர் தாக்கவில்லை, அவர்களுடைய முழுப் போராட்டமும் இனவாத பொலிஸாருக்கு எதிரானவொன்றே. சில கட்டங்களில் வெள்ளை இளைஞர்களும் கறுப்பருடன் சேர்ந்து பொலிசாரைத் தாக்கினர்.

பிரிட்டிஷ் பொலிசாரின் இனவாதப் போக்கிற்கு ஒரு உதாரணம்; பிரிக்ஸ்டன் பொது நூலகத்திற்கு முன்பாக கறுப்பு இளைஞர் கூட்டம் ஒன்று நின்றது. அந்த வழியால வந்த பொலிஸ் வாகனம் ஒன்று 'கிரீச்'சென நின்றது. அதிலிருந்து இறங்கிய ஒரு பொலிஸ் அதிகாரி தான் பற்ற வைத்திருந்த சிகரட்டை ஒரு கறுப்பு இளைஞனின் முகத்தில் மிக மிக மெதுவாக அழுத்தி அணைத்தார்!

பொலிசாருக்கென்று ஒரு தனிப் 'பண்பு' உண்டோ?

— வெளியான்

## நல்லைக் கந்தனின் கொடிச்சீலை

# நாளை இரத பவனி

நல்ல ஊராகிய நல்லூரில் சட்டநாதர் வீதியில் "பொன் பூச்சொரியும் பொழிந்த தாது நிறைக்குமென" சிவ்வந்தம் பிப்புலவரால் புகழ்ந்து பாடப்பெற்ற வரசவிடைக் கொன்றை மரத்தினையுடைய கொன்றையடி வைரவர் கோவிலுக்கு அண்மையிலுள்ள வெற்றி வேலாயுதர் தேவஸ்தானத்திலிருந்து நாளை திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு வீதி உலாவுடன் கொடிச்சீலை சகிதம் இரதம் புறப்படும். இக்கொடிச்சீலையை நல்லைக் கந்தனின் பிரதம குருவாகிய குமாரசுவாமிக்குருக்கள் கிரியா முறைப்படி தம் கைவண்ணத்தால் கீறுவது மரபு வழக்கம்.

ஆதிமூலத்தனில் கந்தனின் ஆயுதமாகிய வெற்றிவேல் தங்கி கொண்டது இத்தலம். சூரனை சம்மாரம் செய்யத் திருவீரவாகுதேவருடன் செங்குந்தர்கள் போரிட்ட செங்குந்த மரபினரே கொடிச்சீலை கொடுப்பதும், சூரன்போர் விழாவில் கலந்துகொள்வதும் வழக்கம். கொடிச்சீலை இரதம் தேவஸ்தானத்தினரால் அனுப்பிவைக்கப்படும் விசேட மேளதாள வாத்தியங்களுடன் புறப்படும் வெற்றிவேல், வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல், செவ்வேல், திருக்கைவேல் என பக்தர் பக்திபரவசத்தால் உந்தப்பட்டு சேடி, கொடி, குடை, ஆலவட்டத்துடன் செல்வதும் ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். நல்லூர் தேவஸ்தான வெளியீடான 'நல்லூர்க் கந்தசுவாமி' என்னும் நூலில் முதலியார் குல. சபாநாதன் கொடியேற்றம் என்னும் பகுதியின் கீழ் பின்வருமாறு கூறியுள்ளார்:

யாழ்ப்பாணத்தில் வதியும் செங்குந்த மரபினர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குக் கொடிச்சீலை கொடுத்துதவுவது அவர்களுடைய முன்னோர் சிதம்பரம் கோயிலுக்குக் கொடிச்சீலை அளித்த வரலாற்றினை நினைவுறுத்துகின்றது.

—க. சி. இராஜேஸ்வரன்—

தில்லைவாழ் அந்தணர் மரபில் தோன்றிய உமாபதி சிவாசாரியார் சிவாகமங்கள் அனைத்தையும் கற்று, தில்லை நடராசப் பெருமானுக்கு வழிபாடுசெய்து பகலில் தீவர்த்தி வெளிச்சத்துடன் சிவிகையில் இருப்பி வந்துகொண்டிருந்தபோது இவரைப் பார்த்து மறைஞான சம்பந்தர் 'பட்டப் பகலிற் பாற்குருடு போகுது பாரீர்' என்று சொல்ல உடனே இவர் பல்லக்கிலிருந்து இறங்கி அவரடியில் வீழ்ந்து வணங்கிச் சீடரானார். இவரது தகுதியை மேலும் ஆராய விரும்பிய மறைஞானசம்பந்தர் கைக்கோளர் தெருவிற்குச் சென்று அவர்கள் பானைக்கு இடும் கூழை ஏற்று உண்ணத்தொடங்கலும் அவர் புறங்கையினின்றும் ஒழுகியதை உமாபதியார் ஏந்திப் பருகினார். உமாபதியார் குல ஒழுக்கம் தவறிவிட்டதாக நினைந்த தில்லைவாழ் அந்தணர்கள் அவரை கோயிற் பூசை செய்வதற்குத் தகுதியற்றவரென விலக்கினர். அவர் அக்கோயிலுக்கு அண்மையிலும் கொற்றவன்குடி என்னும் ஊரில் மடம் ஒன்றை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். தில்லையில் திருவிழாவின்போது கொடியேற மறுப்ப, "உமாபதியார் வந்தாற்றான் கொடியேறும்" என வானில் ஒலியெழலும், தில்லைவாழ் அந்தணர் தம் பிழையுணர்ந்து, அவரை அழைத்து உமாபதி சிவாசாரியார் கந்தப் பெருமானின் கருணையை எண்ணி உளமுருகி, கோயிலுக்குப்போய், செங்குந்தனிடம் கொடிப் கொடியொன்று அளித்து விதலம் செய்வித்தார்கள் பின்னர் கொடிக்கவி பாடிக் கொடியேற்றினர்.

இவ்வாறு கொடிச்சீலை ஏறல் பற்றிய பழைய மரபினை வரலாற்றினை விளக்கியுள்ளார்கள். கந்தனின் கடாட்சம் பெற பக்தர்கள் அனைவரும் பக்தி பரவசத்துடன் வந்து கருணை மாமேக இறைவனை இறைஞ்சுகிறோம்.

## 'கொமெய்னியை அரசியலிலிருந்து மக்கள் கவிழ்க்கவேண்டும்' பானிசதார் கூறுகிறார்

பாரிஸ், ஆக.2

"ஈரானிய மதத்தலைவர் அயதொல்லா கொமெய்னியை ஈரானின் அரசியல் பீடத்திலிருந்து மக்கள் கவிழ்க்க வேண்டும். கொமெய்னி தெய்வீகத் தன்மையிழந்த மதத்தலைவராவர்"

மேற்கண்டவாறு தற்போது பிரான்ஸில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள ஈரானின் முன்னாள் ஜனாதிபதி ஜனப் பானிசதார் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது! "ஈரானில் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் பெறுவதே எனது இலட்சியமாகும். அயதொல்லா கொமெய்னிக்கு எதிராக வெளிநாடுகளிலுள்ள ஈரானின் அரசியல் தலைவர்கள் கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

"ஈரானில் அரசியல் குழப்ப நிலைமை இருந்து வருவதால், நான் அங்கிருந்து பிரான்சிற்கு தப்பிவந்துள்ளேன். ஈரான், அமெரிக்காவின் கைப்பொம்மையாகவிருந்து வருகிறது.

"எனது எதிர்காலத்தைப் பற்றி ஈரானிய மக்களே தீர்மானிக்க வேண்டும். இராணுவப் புரட்சியின் மூலம் ஈரானின் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் எனக்கில்லை" என்றார்.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென்று பானிசதாருக்கு பிரான்சில் தடை விதிக்கப்பட்டபோதும் அவர் இவ்வாறு பகிரங்கமாக அயதொல்லா கொமெய்னியைக் கண்டித்து வருகிறார். (லே)

## கம்பியாவில் சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டது!

### ஜனாதிபதி ஜவாருவிடம் மீண்டும் ஆட்சி அதிகாரம்

டக்கார், ஆக.2

மேற்கு ஆபிரிக்க நாடான கம்பியாவில் நடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் அந்நாட்டின் அரசாங்கத்திற்கு எதிராக மாக்ஸிய இராணுவ படையினரால் மேற்கொள்ளப்பட்ட சதிப்புரட்சியை கம்பியா ஜனாதிபதிக்கு ஆதரவான படைகளும், செனகல் நாட்டுப்படைகளும் முறியடித்துள்ளன.

இச்சதிப்புரட்சியில் ஈடுபட்ட படைகளை உடனடியாக சரணடையுமாறு கம்பியா ஜனாதிபதி சேர் டாவ்டா ஜவாரு உத்தரவிட்டுள்ளார்.

கம்பியா ஜனாதிபதி சேர் டாவ் டாஜவாரு லண்டனில் இடம்பெற்ற இளவரசர் சார்ள்ஸின் திருமண வைபவத்தில் கலந்து கொள்ளச் சென்றபோதே, கம்பியாவில் இத்திடீர் சதிப்புரட்சி இடம் பெற்று, அந்நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தார்.

இச்சம்பவத்தையடுத்து உடனடியாக நாடு திரும்பிய கம்பியா ஜனாதிபதி டாவ்டா ஜவாரு செனகல் நாட்டு படைகளின் உதவியுடன் மீண்டும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியுள்ளார். (லே)





சின்னஞ் சிறிசுகள்
நெஸ்பிறேயில்
செழித்து வளர்கிறார்கள்

உங்கள் செல்வக் குழந்தைகளின் பிள்ளைப் பராயத்தை மகிழ்ச்சிகரமாக்குங்கள். வளரும் பருவத்தில் ஆரோக்கியம் தரும் சத்து மிக்க, கிறீம் சுவையுள்ள நெஸ்பிறேயில் அவர்களை வளருங்கள்.

நெஸ்பிறே 28% பால் கொழுப்பும், 'ஏ','டி' விட்டமின் சத்துகளும் கொண்டது. தகரத்தில் அல்லது காற்றுப் புகா உலோகப் பையில் பக்குவமாக அடைக்கப்பட்டு சுத்தமாகவும் சுவை குன்றாமலும் கிடைக்கிறது. இன்றே வாங்குங்கள்.

நெஸ்பிறே
வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.




400 கிராம்.
ரூ. 22/50
ஒரு கிலோ
ரூ. 78/75

Nestle
ஒரு நெஸ்லே தயாரிப்பு

Grant, K & E 4024

4-வது ஹவுஸ்புல் வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
நூல் வேலி
(கலர்)

வெல்லி
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
பாகப்பிரிவினை

வெலிங்டன்
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-30
அன்னை வேளாங்கண்ணி

லிடோ
Daily 10-30, 2-15, 4-45 7-00 & 9-30
JAWS

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-30, 9-45
பாக்கியராஜ்-அஸ்வினி-சங்கிலி முருகன்
ஒரு கை ஓசை

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-10, 1-00, 4-30, 7-00 9-30
From 3-8-81 to 4-8-81
BIG BUS
From 5-8-81
THE ENFORCER
14-ம் திகதி முதல்
சங்கராபரணம்

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 6-00, 9-30
சிவாஜி, ஜெய்சித்ரா, கமலஹாசன், மஞ்சுளா, நாகேஷ்
சத்யம்
(புத்தம் புதிய பிரதி)
வரவு அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

வெற்றிகரமான 4-வது வார
ஹவுஸ்புல் காட்சிகளாக
ஓடிக்கொண்டிருக்கின்றது
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர், லதா
பல்லாண்டு வாழ்க
[கலர்]

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
வீ.பி. கணேசன், கே. எஸ். பாலசந்திரன்,
மரைக்கார் எஸ்.ராமதாஸ்
மற்றும் பலர் நடித்த
"வி. பி. கணேசன் வழங்கும்
நாடு போற்ற வாழ்க"
திரைக்கதைவசனம் ஒளி பதிவு டைரக்ஷன்
எஸ். என்.தனரத்தினம் ஜோன் யோகராஜா
யசபாலித்த நாணயக்கார
அன்பு என்பது மனிதனை பழிவாங்கும்
ஆயுதமல்ல என்பதை நிரூபித்த லட்சிய
வீரனின் புரட்சிக்காவியம்.

வின்சர் தினசரி 10-30, 2-00, 4-30 7-00 9-30
யாழ்ப்பாணம்)
Charlton Heston and James Coburn
Meet in a Hard - Hitting Tale of the old West
THE LAST HARD MEN
[தமிழ்ப் பதிப்பு]
Color
From 4-8-81
Let'S Live Free
7-ம் திகதி முதல்
ஜெய்சங்கர் - ஸ்ரீபிரியா - நம்பியார்,
ராஜசுலோசனா நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே


## அரசுக்கு—

(3-ம் பக்க தொடர்ச்சி)

பாராளுமன்றம், இந்தியப் பாராளுமன்றம் ஆகியவற்றின் நடவடிக்கைகளையும் ஆதாரம்காட்டி திரு. அமிர்தலிங்கம் அன்று வாதிட்டார். அன்றைய அவரின் 'வாத திறத்துக்காகத்தான்' அவரை 'Knight King Authur's Round Table' என்ற 'ஓல்ட் போய்ட்' பாரிஸ்டர்' லவித் அத்துலத்முதலி அன்று குறிப்பிட்டார்.

"ஏஸ்கின் மே"யின் 18வது பதிப்பை ஆதாரம்காட்டி, சட்ட மூலம் ஒன்றைத் தவிர்ந்த, பிரேரணை அல்லது தீர்மானமொன்றின்மீது, நீதிமன்றத் தீர்ப்புக்காகவுள்ள ஒரு விடயம் குறித்து பேச முடியாது என்றும் சபை முன்னிருப்பது தீர்மானமேயன்றி சட்ட மூலம் அல்ல என்றும் அவர் வாதிட்டார். திரு. அமிர்தலிங்கத்தின் இந்த ஒழுங்குப் பிரச்னைமீது திரு. எம். சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன், திரு. எஸ். டி. பண்டாரநாயக்க, பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, அமைச்சர்கள் திரு. ரோனி டி. மெல், திரு. லலித் அத்துலத்முதலி ஆகியோர் வாதிட்டார்கள்.

இதில் அரசியலமைப்புச் சட்டத்தை அரசாங்கத்தினர் தமக்கு ஆதாரமாகக் காட்டினர்.

"நீதிமன்றம் அதன்கடமையைச் செய்யட்டும், நாம் நமது கடமையைச் செய்வோம்" என்று பிரதமர் அப்போது கூறினார்.

சபை நிரந்தர விதியின் 84(vi)ம் பிரிவு ஒரு விடயம் மீது உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினர் ஒருவருக்கே பொருந்தும் என்று அமைச்சர் அத்துலத் முதலி குறிப்பிட்டார்.

இதில் தீர்ப்பளித்த சபாநாயகர் பாக்கீர் மாக்கார் "ஏஸ்கின் மே"யின் 19வது பதிப்பை ஆதாரம் காட்டி, சபைக்கு இவ்விடயம் வந்தபின்னரே அது நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளது என்றும் எனில் பிரச்னை எழவில்லை என்றும் கூறி நிராகரித்தார். அத்துடன், நீதிமன்றம் முன்னுள்ள விடயங்களிலும் குற்றவியல் வழக்குகள் தொடர்பாகவும், சிவில் வழக்குகள் தொடர்பாகவும் "ஏஸ்கின் மே" வெவ்வேறு விதமாக குறிப்பிடுகிறது என்பதாகவும் அவர் சொன்னார்.

இப்போது சபைமுன் விவாதத்துக்கு வருவது ஒரு பிரேரணையாகும், சபை ஒழுங்குப் புத்தகத்தில பிரேரணை வெளியாகி, விவாத தேதியும் நிர்ணயிக்கப்பட்ட பின்னரே இப்பிரேரணையுடன் தொடர்புடையதான தேர்தல் ஆட்சேபனை மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனில் இது விடயம் பிரச்னை கிளப்பப்படும்வரை இல் தீர்ப்பு எப்படி [illegible]?

இப்பிரச்னை எழுந்த [illegible] பகலுவேளை விவாதத் தேதி, நேர ஒதுக்கீடு பற்றி தீர்மானித்த, பதற்காக கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இவ்விவாதத்தை விரைவாக [illegible] எதிர்க்கட்சித் தலைவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு முன்னதாகவே எடுப்பதற்கு கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரம் வற்புறுத்தியதாகக் கூறும். இவ்விருபிரேரணைகளும் ஜூலை 12ந் தேதி ஒரே தினத்தில் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டன. ஜூலை 7ந் தேதி இது தொடர்பான கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது பிரதமரிடமிருந்த இவ்விவாத தேதிகள் குறித்து திரு சிவசிதம்பரம் தமது


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி-சரோஜாதேவி
[illegible]
நெஞ்சம்


## 'தமிழ் இலக்கியத்தில்தான் பக்தி இலக்கியம் செழிற்புற்றது'

(யாழ்ப்பாணம்)

"ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் இசைக்கலையை வளர்த்து வந்துள்ளனர். கர்நாடக இசையின் சொற்தக்காரர்களும் தமிழர்களே"

இவ்வாறு தென்னிந்திய இசைமேதை திருமதி டி. ஆர். ஜீவரத்தினத்தின் இசை நிகழ்ச்சி விழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு.எஸ். சிவதாசன் தெரிவித்தார். இவ்விழா, யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. சிவதாசன் தொடர்ந்து உரையாற்றுகையில் 'தமிழ் இலக்கியங்களில்தான் பக்தி இலக்கியம் செழிப்புற்று வளர்ந்து வந்திருக்கின்றது. மற்றைய மொழிகளிலுள்ள இலக்கியங்களில், பக்தி இலக்கியம் வளரவில்லை. இசைக்கலையைப் பொறுத்தவரை இலங்கைக்கு தாய்நாடாக இந்தியா விளங்குகின்றது. இசைஞானம் மிக்கவர்களது திறமையை நாம் பாராட்ட வேண்டியது எமது கடமைகளில் ஒன்றாகும். திருமதி ஜீவரத்தினம், தனது மதுரமான இசையினால் எம்மை மகிழ்வித்ததை எண்ணி நானே ஒருமுறை மெய்சிலிர்த்து விட்டேன்" என்றார்.

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி வரைப்பிட்டி விநாயகராலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 15-8-81 சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவுடன் நிறைவுபெறும்.

உற்சவகாலத்தில் தினமும் சுப்பரமாணிய இன்னிசை விரிவுரை பிரம்மஸ்ரீ கி. வை. நித்தியானந்த சர்மாவால் நடாத்தப்படும். (கு)

## அவர் இட்ட திலகம்

(புலோலி)

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. ஐ. தம்பிமுத்துவுக்குப் பருத்தித்துறை இளைஞர் பேரவையினால் நடாத்தப்பட்ட வரவேற்புக் கூட்டத்தை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த யாழ். எம். பீ. திரு. வே. யோகேஸ்வரன், பருத்தித்துறை எம். பீ திரு. கே. துரைரத்தினம் ஆகியோருக்கு கௌரவிக்கப்பட்ட இளைஞரொருவர் தனது கையிலிருந்து இரத்தத்திலகமிட்டார்.

எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார். இவ்விவாத தேதிகளைத் தாம் ஏற்கவில்லை என்றும் அரசுக்கெதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் முக்கியமானது; அது விரைவாக விவாதத்துக்கு எடுக்கப்பட வேண்டும்; அதுதான் பாராளுமன்ற சம்பிரதாயம் என்றும் கூறி, அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முதலில் விவாதத்துக்கு எடுக்க அவர் வற்புறுத்தியிருந்தார். ஆனாலும் பிரதமர் அதற்கு சம்மதிக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவருக்கெதிரான பிரேரணையே முதலில் கொடுக்கப்பட்டது என்றும் அதனால் அதுவே முதலில் விவாதத்துக்கு எடுக்கப்பட வேண்டும் என்பதும் பிரதமரின் கருத்தாகவிருந்தது. திரு. சிவசிதம்பரத்தின் கருத்தை திருவாளர்கள் மைத்திரிபால சேனநாயக்க, சரத் முத்தெட்டுவேகம ஆகியோரும் ஆதரித்திருந்தார்கள்.

நாளை நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படும் வேளையிலோ அல்லது விவாதத்தின் நடுவிலோ உறுப்பினர் ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போதோ ஒழுங்குப் பிரச்னை கிளப்பப்படலாம். பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்பட்ட பின்னரே [illegible]

## இன்றைய பலன்

ஆடி மாதம் 19ம் திகதி
திங்கட்கிழமை
(3-8-81)

மேடம்: உலக சமாதானம் பேணுவதில் அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள். பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரும். பொருள்வரவுக்கிடமுண்டு.

இடபம்: ஆலயவேலைத் திருப்பணிகளில் நடைபெறும் பணிகளின் சூழ்நிலைகள் பலமாக [illegible] தொல்லைகள் ஏற்படநேரிடலாம். குடும்பத்தில் இடைக்கால பிரிவுக்கு இடமுண்டு.

மிதுனம்: புதிய சூழ்நிலைகளுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும் பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும். குடும்ப வாழ்க்கையில் [illegible] இனிக்கும்.

கடகம்: அன்னியர் சகவாசமும் உங்களை ஆபத்திலிருந்து காக்கும். [illegible] விடயத்துக்கு கூட அதிக ஆக்கிரமிப்புகள் அடக்கம் வேண்டும்.

சிம்மம்: தனிமான மிருகத்தும் தவரானிற்கும் இடமுண்டு. இருக்கு [illegible] குடும்பத்தில் [illegible] முன்னேற்றமுண்டு.

கன்னி: தொழில் துறையில் தனிமாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாக கிடைக்கும். நண்பர்கள்மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும்.

துலாம்: அதிர்ஷ்ட தேவதையின், அணைப்பு உங்களுக்கு கிடைக்கலாம். இசைப்பட தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடும். எல்லாக்குள்ளும் ஒருவரின் ஆதரவும் தப்பாமல் உண்டு.

விருட்சிகம்: வாழ்க்கையில் சிறு பூசல்கள் தோன்றி மறையும். கடமையில் தடைகள் ஏற்படும். சிலர் கடன்படவும் நேரிடும். மதுபானத்தைத் தவிர்க்கவும்.

தனு: எக்கரும மற்றையும் எண்ணித் துணிதல் அவசியம். பொச்சிறும் அறுவையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக் கூடும். கண்ணீர்களையின் கிட்டத்திட்டத் தவிர்க்கவும் தீர்வாக வேண்டும்.

மகரம்: வாழ்க்கையில் ஏற்படும் திடீர் திருப்பம் திரவியலாபத்தைக் கொண்டுவரலாம். கலைஞர்கள் புதிய துறைகளில் முயற்சி செய்வதற்கு விரும்புவார்கள் [illegible] ஆதரவு கிடைக்கும்.

கும்பம்: அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சம்பவங்கள் இடம்பெறலாம். வைத்தியச் செலவுக்கு இடமுண்டு. நிதானம் வேண்டும்.

மீனம்: கலைத்துறை நடிப்பில் மற்றவர்கள் பெருமைப்படும் அளவுக்கு முன்னேற்றமுண்டு. அதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் சிறப்பான தினம்.

சோதிடகலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை

கம்பர்மலைப் பயங்கரம்

# "தொட்டிலுக்குள் குழந்தை அழுதுகொண்டுகிடந்தது"

## மரணவிசாரணையில் அயல் பெண் சாட்சியம்

[புலோலி]

"சம்பவதினமிரவு துவக்கு வெடிச்சத்தம் கேட்டு நாராயணசாமியின் வீட்டிற்குச் சென்ற நான் தொட்டிலுக்குள் அழுதுகொண்டிருந்த குழந்தையைத் தூக்கிச்சென்றேன்."

இவ்வாறு கம்பர்மலையில் நள்ளிரவில் நடைபெற்ற பயங்கரத் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான அறுவரின் மரணவிசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில்நீதவான் திரு.கே.எஸ். மகேசன் முன்னிலையில் நடைபெற்றபோது சாட்சியமளித்த அயல்வீட்டுக்காரரான திருமதி சரஸ்வதி வைத்திலிங்கம்என்ற பெண் சொன்னார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

சுமார் 12 1/2 மணியளவில் துவக்கு வெடிச் சத்தமொன்று கேட்டது. சத்தம் கேட்டவுடன் பயத்தினால் நான் அவ்விடத்திற்குப் போகவில்லை. சுமார் அரைமணி நேரம் சென்றபின் சம்பவம் நிகழ்ந்த இடமாகிய நாராயணசாமியின் வீட்டுக்குச் சென்றேன்.

வீட்டிற்குக் கிட்டப்போகும் போது அங்கு பிள்ளை அழுத சத்தம் கேட்டது. ஆதலால் வீட்டுக்கு உள்ளே சென்றேன். அப்பொழுது அந்த வீட்டு வாசற்சுவரோடு நாராயணசாமி பெண் அழகம்மா இறந்துகிடந்ததையும் அவருக்குப் பக்கத்தில் கந்தையா பெண் அழகம்மா இறந்து கிடப்பதையும் கண்டேன். அப்பொழுது லாம்பு எரிந்து கொண்டிருந்தது.

நாராயணசாமி அழகம்மாவின் சடலத்திற்கு அருகில் தொட்டிலுக்குள் இருந்த குழந்தை [துஷ்ஜயந்தன்] அழுது கொண்டுகிடந்தது.

நான் அக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு எனது வீட்டிற்குப் போனபோது அங்கு பொலிசார் நின்றனர்கள்.

அப்பிள்ளையைத் தூக்கிச் சென்று எனது வீட்டில் வைத்திருந்த கால்மணி நேரத்தில் ஊளறிக்கொண்டு ஓடிவந்த குழந்தையின் பெரிய தாய் அதிருபவதியிடம் குழந்தையைக் கொடுத்தேன்.

இதனைத் தொடர்ந்து சாட்சியமளிப்பதற்குப் பொலிசார் நீதிமன்றத்தில் சமூகமளித்திருக்காதபடியால் நீதவான் மேல்விசாரணையை நாளை 4-ம திகதிக்கு ஒத்திவைத்தார்.

### டாக்டர் சாட்சியம்

"இறந்த அறுவருக்கும் துப்பாக்கிச்சூட்டினாலேயே மரணம் சம்பவித்துள்ளது. மரணமானவர்களின் உடம்பிலிருந்து மீட்கப்பட்ட சன்னங்களும் அடைப்பங்களும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இவ்வாறு கம்பர்மலையில் நள்ளிரவுவேளையில் நடைபெற்ற பயங்கரத் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான அறுவரின் பிரேத பரிசோதனையைமேற்கொண்ட மந்திகை அரசினர் வைத்தியசாலை டாக்டர் கே. லலிதகுமார் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார். இந்த அறுவரின் சடலங்களையும் கந்தையா நாராயணசாமியும், நாராயணசாமி அழகேஸ்வரனும் அடையாளம் காட்டினர். இறந்தவர்களின் உடல்களில் இருந்து எடுக்கப்பட்ட சன்னங்களையும அடைப்பங்களையும் பருத்தித்துறை பொலீஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. எஸ், திருச்சிற்றம்பலத்திடம் ஒப்படைத்தேன் என்று டாக்டர் தெரிவித்தார். [அ]

# 'மரமுந்திரிகை பாணியின் பயன்பற்றி ஆராய்க'

## பி. அ .அமைச்சருக்குக் கோரிக்கை

[மன்னார்]

மரமுந்திரிகைப் பாணியின் பயன் பற்றிப்பரிசிலனை செய்து முடிவுகாண நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் மாவட்டப் பனம் பொருள் உற்பத்தியாளர் சங்கத்தலைவரும் இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் நிர்வாகக் குழு உறுப்பினருமான டாக்டர் ஜோன் மார்க் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையைக் கேட்டுள்ளார்,

மன்னார் மாவட்டத்தில் பெருமளவு உற்பத்தி செய்யப்படும் மரமுந்திரிகைப் பாணியினால் மலேரியாக்காய்ச்சல், கட்டி பெண்களின் கர்ப்பப்பைரோகம் போன்ற நோய்களைக் குணமாக்கலாம் எனவும் டாக்டர் ஜோன் மார்க் தெரிவித்துள்ளார்.

## நாளைய இலக்கிய சந்திப்பில் குணசேனவிதான

[யாழ்ப்பாணம்]

பிரபல - சிங்கள எழுத்தாளரும், மக்கள் எழுத்தாளர் முன்னணிச் செயலாளருமான திரு. குணசேனவிதான மல்லிகைப்பந்தலின் ஆதரவில் ஸ்ரான்லி வீதி ஜேஸ்கலவி நிறுவனத்தில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கும் இலக்கிய சந்திப்பில் கலந்துகொள்ளுவார்.

இவர் ஆசிய ஆபிரிக்க எழுத்தாளர் நிறுவனப் பரிசாலலோட்டஸ் பரிசை 1980-ம் ஆண்டில் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. [சு]

## கோலாலம்பூர் துணை ஆயர் யாழ். வருகிறார்

[பண்டத்தரிப்பு]

கோலாலம்பூ துணை ஆயர் அதி. வந். அன்ரனி செல்லநாயகம் ஆண்டகை எதிர் வரும் 5-ம் திகதி புதன்கிழமையன்று இலங்கைக்கு விஜயம் செய்கின்றார்.

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த சில்லாலை கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட துணை ஆயருக்கு சில்லாலை பொதுமக்கள் சார்பில் கதிரை மாதா ஆலயத்தில் எதிர்வரும் ஆறும் திகதியன்று பொதுவரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

அன்று திவ்ய கதிரைமாதா ஆலயத்தில் துணை ஆயர் அதி வந். அன்ரனி செல்லநாயகம் ஆண்டகை திருப்பலிப் பூசையை ஒப்புக்கொடுப்பார் இவ்வைபவத்தில் யாழ். ஆயர் அதி. வந். கலாநிதி பி. தியோகுப்பிள்ளை, மட்டக்களப்பு ஆயர் அதி. வந். எல். ஆர் அன்ரனி ஆண்டகை ஆகியோரும் பங்குபற்றுவார்கள்.

# "நிர்வாகப்பரவல் அரசியல் மாற்றத்தின் முக்கிய அம்சம்

## நாம் அதனைச் சிறப்பாகப் பயன்படுத்தவேண்டும்"

—உடுப்பிட்டி எம். பி

[புலோலி]

"நிர்வாகத்தைப் பரவலாக்கி மாவட்டரீதியில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டது அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் முக்கிய அம்சமாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இயற்கைமூலவளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி எமது பகுதிகளின் அபிவிருத்திகளை மேற்கொள்ள இது வழிவகுக்கின்றமையால் நாம் இதைச் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும்"

இவ்வாறு தென்புலோலியூர் அறிவகம் சனசமூகநிலையத்தின் 26வது ஆண்டுவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் குறிப்பிட்டார். திரு. அ. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்து பேசிய உடுப்பிட்டி எம். பி. குறிப்பிட்டதாவது:

### காலத்திற்கு ஏற்ப மாற்றம்வேண்டும்

"காலத்திற்குக்காலம் அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப நாம் எமது நடவடிக்கைகளையும் மாற்றிக் கொள்ளவேண்டும். தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்தமட்டில் நாம் பொறுப்புணர்ச்சியுடனும் கட்டுக்கோப்புடனும் ஒற்றுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் இயங்க வேண்டியநிலையில் உள்ளோம்.

### நவீனமுறையில் முதலீடுவேண்டும்

வடக்கு, கிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரை பாரிய இயற்கை மூலவளங்களும், உழைப்பு சக்தியும் பொருளாதாரவளம்படைத்தவர்களும் இருக்கின்றனர். இவைகளை ஒருங்கிணைத்துக் கட்டுக்கோப்புடன் இயங்கி நவீன முறையில் முதலீடுகளை இட்டு எமது பகுதி அபிவிருத்திகளை மேற்கொள்ளவேண்டும.

"கிராமிய அபிவிருத்திக்கு கிராமங்களில் உள்ள அபிவிருத்திச்சங்கங்கள், சனசமூக நிலையங்கள் போன்ற இயக்கங்கள் இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன. சமூக, பொருளாதார அபிவிருத்திகள், கிராம எழுச்சி, இளைஞர் சமுதாய முன்னேற்றம் போன்றவற்றின்மேம்பாட்டை இந்நிறுவனங்கள் உண்டாக்க முடியும்.

"புதிய கிராமஅபிவிருத்தித் திட்டத்தில் கிராமஅபிவிருத்தி சங்கங்களுக்கு முக்கிய இடமளிக்கப்படுகின்றமையினால் சிறப்பாக இயங்கிவரும் இச் சனசமூக நிலையத்தைக் கிராம அபிவிருத்திச் சங்கமாக மாற்றினால் இக்கிராம அபிவிருத்திக்கு வழிவகுக்கக்கூடியதாக இருக்கும்,"

இதனையொட்டி நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகளுக்கான பரிசில்களை அனைத்தும் பளை கிராமசேவை அலுவலர் திரு. சேதுநாயகம் வழங்கினார். [அ]

## நீதிமன்றப் பாதுகாப்பில் கார்

[புலோலி]

வடபிரதேச ஐக்கியதேசியக் கட்சிப் பிரதம அமைப்பாளர் திரு.கே .கணேசலிங்கம் வீட்டு துப்பாக்கிப்பிரயோகம்சம்பந்தமாகக் கருதப்பட்ட கார், பருத்தித்துறை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

புலோலியிலுள்ள வடபிரதேச ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதம அமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கத்தின் வீட்டிற்குத் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது சம்சந்தமாக பருத்தித்துறைப் பொலிசார் வல்வெட்டித்துறையைச் சார்ந்த மூன்று இளைஞர்களைக் கைதுசெய்ததுடன் காரொன்றையும் கைப்பற்றியிருந்தனர்.

சந்தேகநபர்களான மூன்று இளைஞர்களும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். சம்பந்தப்பட்ட கார் பொலிஸ் பாதுகாப்பிலேயேவைக்கப்பட்டிருந்தது. தற்போதுபருத்தித்துறைப் பொலிசார் காரை பருத்தித்துறை நீதிமன்றத்திற்குப் பாரம் கொடுத்துள்ளனர். கார் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## முழு நகையும் மீட்பு: மூவர் கைது

[வவனியா]

தீப்பிடித்த வீடொன்றிலிருந்து கடந்த மாதம் காணமல் போன 65 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை வவனியாப் பொலிசார் மீட்டுள்ளனர்.

குடியிருப்பு என்னுமிடத்தில் திருநாவுக்கரசு சரஸ்வதி என்பவரது வீட்டில் பகல் நேரத்தில் தீவிபத்து ஏற்பட்டது. தீயிலிருந்து வீட்டுப் பொருட்களைச் சேதமடையாமல் அப்புறப்படுத்திய வேளையில் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் காணமல் போயின.

இது தொடர்பாக வவனியாப் பொலிசில் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டன. எஞ்சிய 65 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகள் கோவில் புதுக்குளம் என்னுமிடத்தில் ரெங்கசாமி என்பவரது வீட்டு வளவினுள் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததைப் பொலிசார் கண்டுபிடித்தனர்.

இதுதொடர்பாக ரெங்கசாமியும் அவரது மனைவி தெய்வானை, மைத்துனர் வேலுப்பிள்ளை ஆகியோரையும் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் சார்ஜன் மேஜர் வின்சன், சார்ஜன் டீ. பி. ஹசன் ஆகியோர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மஜ்னூன், எக்கநாயக்கா ஆகியோரின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [அ]

## பாலசிங்கத்திற்கு மேலும் இரு கடமைகள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் இணைப்புச்செயலாளராகக் கடமையாற்றிவரும் திரு. ச. பாலசிங்கம் பிராந்திய அமைச்சின் யாழ். உதவிப் பணிப்பாளராகவும் உள்நாட்டு வர்த்தகதிணைக்கள யாழ் பிராந்திய ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். ஒரே நேரத்தில் இந்த மூன்று பதவிகளையும் இவர் வகித்துவருவார்.

## வைத்தியம்

மனநோய், வலி, நாட்பட்டதாயினும் உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும்: வி. ரி. சந்திரன் 218/5 பலாலி வீதி கந்தர் மடம், யாழ்ப்பாணம். 0506

## சிறிமா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதுசம்பந்தமான தீர்மானங்களை அவர் சுதந்திரமாக மேற்கொள்ளலாம்.

ஃ அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். [ம]

## இன்று

[தருநெல்வேலி]

திருநெல்வேலி வடக்கு அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அப்மன் ருதுசோபனவிழா இன்று மாலை நடைபெறும். விசேஷ நிகழ்ச்சியாக தமிழ்நாடு மாயவரம் செம்மனா கோயில் முத்துக்குமாரசாமி ராஜு-மோகன் சகோதரர்களது நாதஸ்வரக்கச்சேரி நடைபெறும்தமிழ்நாடு தேரெழுந்தூர் வை. இராஜரத்தினம் பிள்ளையும் யாழ்ப்பாணம் சின்னப்பழனியும் தவில்வாசிப்பார்கள்.

## இன்று பாராட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ். நவீன சந்தை வர்த்தக உரிமையாளர் சங்கத்தின் சிறப்புத் தலைவர் திரு தம்பையா சங்கரப்பிள்ளை நீதி அமைச்சினால் யாழ். மாவட்ட சமாதான நீதவனாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி அவருக்கு இன்று மாலை யாழ். நவீன சந்தை மேல்மாடியில் தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்படவிருக்கிறது.

## சர்வதேச...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சுடன் தொடர்பு கொள்ளவும் அண்மையில் இந்தியாவிலுள்ள மறைமலையடிகள் நூலகத்துக்கு சென்றபொழுது 1884ம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான சத்திரசிகிச்சை பற்றிய நூலையும் பார்வையிட்டேன்" என்றார். [மா-த]

## ஆட்சேபம்

சென்னை, ஆக.2

ராமேஸ்வரத்திற்கும் கச்சதீவிற்குமிடையே இலங்கை அரசாங்கம் கடற்படைப் பயிற்சியை மேற்கொள்ளவிருப்பது குறித்து ராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி, 63ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறைவீதி,
303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆகஸ்ட் 3ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper
at the General Post office; Sri Lanka. Regd. Q B 100236/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.